# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20



சகோ. காலேப் யோசுவா
11/ 29, திருமால் நகர் Extn. II,
போன்: 26490183
8வது குறுக்கு தெரு, பூந்தமல்லி, சென்னை - 600 056.


## ஐயோ, ஆபத்து! ஆபத்து!! வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ் பிசாசின் கண்ணியில் விழுந்ததே!

1. பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல உங்களை விழுங்க வகை தேடி சுற்றித்திரிகிறான். சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே. நீங்கள் சாத்தானாலே மோசம் போகாதபடிக்கு இவைகளை எழுதி உங்களை எச்சரிக்க வேண்டியது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. பக்திவிருத்தி அடைவதற்காக சுவிசேஷகனாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட என்னுடைய கடமையாயிருக்கிறது. சாத்தானுடைய ஆழங்கள் என்று சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்று உங்களுக்கு இந்த செய்தித்தொகுப்பை என்னிலுள்ள கிறிஸ்துவின் சத்தியத்தைக் கொண்டு எழுதுகிறேன். பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க தேவன் தம்முடைய சர்வாயுத வர்க்கத்தையும், திராணியையும் எனக்கு கொடுத்ததற்காக அவரை நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோத்தரிக்கிறேன்.

2. பிரியமானவர்களே, பிதாவாகிய தேவனாலும் நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

3. 19-11-2005 அன்று எனக்கு 28வது மறுஜென்ம நாள். கடந்த 27 ஆண்டுகளாக இந்த ஆவிக்குரிய ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நான் யாதொன்றிலும் யாருக்கும் இடறல் உண்டாக்காமல், தேவவசனத்தை கலப்படமாய் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், இக்காலத்துக்குரிய செய்தியின் பிரகாரமாகவும் தேவஆவியினால் ஏவப்பட்டு உங்களோடு எனது செய்தித்தொகுப்புகள் வாயிலாக இடைப்பட்டு எவ்விதத்திலேயும், என்னை தேவஊழியக்காரனாக விளங்கப்பண்ணிக்கொண்டு வருகிறேன், தகப்பன் பிள்ளைகளுக்கு சொல்லுகிறது போல, நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் புத்தியும், எச்சரிப்பும், தேறுதலுமான வார்த்தைகளை எழுதிவருகிறேன் என்பதற்கு எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியே எனக்கு மெய்யான சாட்சியாக இருக்கிறது.

4. நான் என் வாழ்க்கையின் பாதையில் கடந்த 27 ஆண்டுகளாக, நான் அறிய ஒருவருக்கும் அநியாயம் செய்யவில்லை. ஒருவரையும் கெடுக்கவில்லை. ஒருவரையும் வஞ்சிக்கவில்லை. கர்த்தருடைய தசமபாகத்தை திருடவில்லை. சபையின் காணிக்கைகளை கொள்ளையடிக்கவில்லை. எனக்கு இருக்கிறவைகள் போதும் என்ற மனப்பக்குவத்துடன், எனக்கு உண்டாயிருக்கிற சகல பாடு, நிந்தை, நெருக்கம், அவமானம் அனைத்திலும் பரிபூரண சந்தோஷமாக கர்த்தர் எனக்கு கொடுத்த மனைவி மக்களுடன் சந்தோஷமான, மனரம்மியமான ஒரு வாழ்க்கை வாழ்ந்து தேவநீதியை நடப்பிக்கும் ஊழியம் செய்து வருகிறேன். நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் வேதவாக்கியங்களை, இக்காலத்துக்குரிய செய்தியை விவரித்து காண்பித்து வருகிறேன்.

5. நான் மாம்சத்தின் படி நடக்கிறவனாக இருந்தாலும் மாம்சத்தின்படி போர் செய்யாமலும், மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமலும், தேவனுடைய மாபெரும் கிருபையினால் உலகத்திலேயும், விசேஷமாக உங்கள் இடத்திலேயும் கபடமில்லாமலும் திவ்விய உண்மையோடே நடந்து வருகிறேன். ஒருவரும் என்னை குறித்து முகமுகமாக குற்றப்படுத்தாதபடிக்கு நான் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை கடந்த 27 ஆண்டுகளாக செய்து வருகிறேன் என்பதற்கு எனது மனசாட்சி என்னைக் குறித்து சொல்லும் சாட்சியே என் புகழ்ச்சியாயிருக்கிறது. ஆனாலும் என்னை முதுகில் குத்துகிறவர்கள் அநேகர் உண்டு.

6. இந்த வனாந்திர வாழ்க்கையில், ஆவிக்குரிய வாழ்க்கையில், ஊழியத்தின் பாதையில் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும் ஒடுங்கி போனதில்லை. கலக்கமடைந்தாலும் மனமுறிவடையவில்லை. பாடுகள் அனுதினமும் பெருகினாலும் கிறிஸ்துவுக்குள் ஆறுதலும் எப்பொழுதும் பெருகி வருகிறது. ஆக துக்கத்தின் மத்தியில் சந்தோஷமும், தரித்திரத்தின் மத்தியில் ஐசுவரியமும், ஒன்றுமில்லாதவன் எனப்பட்டாலும் சகலத்தையும் உடையவனாக என்னை அழைத்தவர் விளங்கப்பண்ணி வருகிறார். கிறிஸ்துவுக்குள் என்னை எப்பொழுதும் வெற்றிசிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

7. என் ஊழியத்துக்கு, என் குடும்பத்துக்கு தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் பண உதவிகள் செய்தவர்களையும், எங்களை தங்கள் அனுதின ஜெபங்களினால் தாங்கினவர்களையும் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி அவர்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில் நிறைவாக்குவாராக. ஆமென்.

8. என்னுடைய செய்தித்தொகுப்புகள் அனைத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகவே பல நெருக்கங்களின் மத்தியில், பணப்பற்றாக்குறை மத்தியில், கடன்பட்டு அவ்வப்பொழுது எழுதிவருகிறேன். இவைகள் ஒருவனுக்கு இடறலாகயிருக்குமானால் அவன் அதற்கென்றே நியமிக்கப்பட்டவன் என்று என்னால் உறுதியாக கூறமுடியும். இந்த பிரபஞ்சத்தின் தேவன் அவன் மனதை குருடாக்கினான். ஆனாலும் நீங்கள் என் மனதின்படி இருக்கிறவர்களாகவும், நானும் உங்கள் மனதின்படி இருக்கிறவனாயிருக்கவும், நாம் ஒருவரையொருவர் கண்டுகளிக்க கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென்.

9. ***ஐயோ, ஆபத்து! ஆபத்து!! வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ் பிசாசின் கண்ணியில் விழுந்ததே!*** என்ற தலைப்பில் நான் இங்கு உங்களை புத்திமான்கள் என்று எண்ணி எழுதுகிறேன். இதன் மூலமாக உங்களோடு பேசிகிறேன். நான் எழுதுகிறதை, உங்களோடு இந்த எழுத்துக்களின் வாயிலாக பேசுகிறதை நீங்கள் நிதானித்துப் பாருங்கள். ***இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் யூதாஸ் ஸ்காரியோத்து. காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போய் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று இவன் பிரசங்கித்தான். வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினான். குஷ்டரோகிகளை சுத்தம்பண்ணினான். மரித்தோரை எழுப்பினான். பிசாசுகளை துரத்தினான் மத்.10.1-8. இவைகளை நடப்பித்த யூதாஸ்க்குள் ஒரு நாள் சாத்தான் புகுந்தான். (லூக் 22.3) அவ்விதமாகவே இக்காலத்துக்குரிய செய்தி உலகம் முழுவதும் சென்றடைய மிக்க பிரயாசப்பட்டு, இன்று நம் ஒவ்வொருவருடைய கரங்களிலும் செய்தி வந்தடையச் செய்த வாய்ஸ் ஆக் காட் ரெக்கார்டிங்ஸ்குள் சாத்தான் புகுந்ததை கடந்த அக்டோபர் 2004 (1) செய்தித் தொகுப்பில் எழுதினேன். இந்த இரண்டாவது செய்தித்தொகுப்புக்கு முன், முந்தின செய்தித் தொகுப்பை சுருக்கமாக மீண்டும் கீழே உங்கள் சிந்தனைக்கு எழுதுகிறேன்.***

10. ஏழாம் சபைக்கால தூதன், தீர்க்கதரிசி, சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் *ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு* என்ற தன்னுடைய செய்தியில் கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார்.
And even those who are alive and remain 'til His coming shall not hinder those which are asleep, for the Trumpet of God shall sound at that last Trumpet, when the last seal is broke, **And when the Seventh Angel has given his message;** ***the last Trumpet shall sound*** and the dead in Christ shall rise, and we which are alive and remain shall be caught up together with them to meet Him in the air. (***The Revelation of the Seven Seal, 1967 edition. The Brea***ch, page 105, para 5)

11. இந்த பகுதியை கீழ்க்கண்டவாறு தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார்கள்.
கர்த்தரின் வருகை மட்டும் உயிரோடிருக்கிறவர்கள் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் கடைசி எக்காளத்தில் தேவஎக்காளம் முழங்கும். அப்பொழுது கடைசி முத்திரை உடைக்கப்பட்டிருக்கும். ***ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்த பின்னர், கடைசி எக்காளம் முழங்கும்.*** அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடே கூட எடுக்கப்பட்டு அவரை ஆகாயத்தில் சந்திப்போம். (***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு***, மணவாட்டி கூடாரம் பதிப்பு, பக்கம் 109, முதல் பத்தி)
இது தான் சகோ.பிரன்காம் ஆங்கிலத்தில் பிரசங்கித்ததும், அதன் சரியான தமிழ் மொழிப்பெயர்ப்பும் ஆகும்.

12. இப்பொழுது சாத்தான் ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*** குள் இறங்கி, செய்தியை எவ்வாறு தாறுமாறாக்கிவிட்டான் என்பதை கவனியுங்கள்.
The Revelation of the Seven Seals புதிய ஆங்கில பிரிண்ட் 1993-ல் நாம் மேற்கண்ட பகுதி தவறாக, முற்றிலுமாக வேறுப்பட்ட கருத்துடன் பிரிண்ட் செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதை, இதன் பக்கம் 93, பத்தி 256-ல் காணலாம். அது கீழ்க்கண்டவாறு:
When the last seal is broke, and ***when the seventh angel has given his message*** என்பது when the last seal is broke, when ***the seventh angel is giving his message*** என முற்றிலுமாக அர்த்தம், பொருள் வேறுபடும் அளவுக்கு மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

*13.* ***அதாவது ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்த பின்னர் கடைசி எக்காளம் முழங்கும் என்பதை ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும் போது கடைசி எக்காளம் முழங்கும் என பிரிண்ட் செய்துள்ளார்கள். இதை தமிழில் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, புதிய பதிப்பு பக்கம் 176, பத்தி 256-ல் வாசிக்கலாம். அதாவது ஏழாம் சபைக்கால தூதன் செய்திக்கு பின்னர் நடக்கவேண்டிய ஒரு சம்பவத்தை ஏழாம் சபைக்கால தூதன் செய்தி கொடுத்துகொண்டிருக்கும்போது நடக்கும் என தவறாக பிரிண்ட் செய்து உலகம் முழுவதிலும் செய்தியிலுள்ள மக்களை குழப்பத்துக்குள் கொண்டு வந்து, அவர்களை திசை திருப்புகிறார்கள். மக்களை சரியான பாதையிலிருந்து திசை திருப்புகிறவன் யார்? அவன் பிசாசு. இப்பொழுது இதை கொண்டு ஏழாம்சபைக்கால தூதன் தன் செய்தியை கொடுத்து கொண்டிருக்கும்போதே தேவ எக்காளம் ஊதப்பட்டு கர்த்தர் வானத்திலிருந்து 1963-ல் இறங்கி வந்துவிட்டார் என்ற உபதேசம் வெளிவந்தது. கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என பட்டாபிராம் பாஸ்டர் எட்வர்ட் அவர்களும், மரித்தோர் உயிர்த்தெழுதல் நடந்து கொண்டிருக்கிறது என மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் போன்றவர்கள் உபதேசம் பண்ணினார்கள். அதோ, நீக்ரோ பெண் உயிர்த்தெழுந்துவிட்டாள் என புகைப்படம் எடுத்து, அதை பிரசுரித்து மக்களை சாத்தான் ஏமாற்றினான். மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் மக்களை வஞ்சித்தார்.***

14. ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இந்த கள்ள உபதேசத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டார்கள். சாத்தான் கண்ணியிலிருந்து தப்பினார்கள். கர்த்தருடைய மந்தையில் இல்லாத வெள்ளாடுகள் இவர்கள் இருவர் பின் சென்றனர். நடக்காத ஒன்றை நடந்துவிட்டதாக நம்பி மோசம் போனார்கள். இதற்கு காரணம் யார்? ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*** தான். ஒரு கூட்டம் மக்களை படுகுழிக்குள் தள்ளிய தனிப்பெருமை இதையே சாரும்.

**15.** கர்த்தர் எனக்கு கொடுத்த கிருபையின்படி, இப்பொழுது இரண்டாவது முறையாக ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*** குள் பிசாசானவன் எவ்வாறு இறங்கி ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற தேவனுடைய சத்தத்திலிருந்து மக்களை திசை திருப்பிவிட்டான் என்பதை ஆவிக்குரியவர்கள் நிதானித்துப் பாருங்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு ***கோல்டன் நக்கெட்ஸ்*** (***Golden Nuggets***) என்ற புத்தகத்தில் கீழ்க்கண்ட தலைப்பில் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற பகுதியை வாசித்தேன். அதாவது:

## THERE'LL NEVER BE ANOTHER ON THE FIELD

This is the last time, because I'm leaving the country. ***There'll never be another on the field when I'm gone. "Thus saith the Lord." There has not been and will not be*** (***Uncertain sound*** 15-4-1961, Bloomington, IL)

**16.** இது ஒரு முக்கியமான காரியம் குறித்து ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற **தேவசத்தம்** ஆகும். கடைசி காலம், கடைசி கால சபை, கடைசி கால சபை தூதன், கடைசி செய்தி, கடைசி செய்தியாளன், இவைகளை மனதில் கொண்டு இந்த ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற தேவசத்தம் முற்றிலும் சரியானது என ஆவிக்குள் உணர்ந்தேன். அதில் கடுகு அளவு கூட என் உள்ளத்தில் சந்தேகம் பிறக்கவில்லை. அதை அப்படியே ஏற்றுக் கொண்டேன். ஆனால் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற ***தேவனுடைய சத்தத்தை*** உரைக்கப்பட்ட செய்தியிலும் உறுதிப்படுத்தவேண்டும் என்ற ஆர்வம் நீண்ட காலமாக என் உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனாலும் அதை உறுதிப்படுத்தும் முன்பே, ஏழாம் சபைக்கால தூதன் செய்திக்குப் பின்னர் இனி ஒரு தேவனுடைய மனுஷன் எழும்ப தேவையில்லை, எழும்பபோவதுமில்லை என செய்தித் தொகுப்புகளில் எழுதினேன். பிரசங்கித்து வந்தேன். ஏனென்றால் சகோ.பிரன்காம்க்கு பிறகு சகோ.பாலாசீர் லாறி என்பவர் எழும்பி, அற்புத அடையாளங்களை நடப்பித்தார். தன்னை மனுஷகுமாரன் (The Son of Man) என அழைத்துக்கொண்டார். தன்னை பின்பற்ற ஒரு பெரிய கூட்டம் ஜனங்களை இழுத்தார். முடிவில் அவர் அழிந்து போனார். அவரை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். அவமாய் போனார்கள்.

17. மேலும் வேலூர் சகோ. தாமஸ், சென்னை சகோ. ஜோசுவா கமாலியேல், புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ், மும்பை சகோ.டேனியேல் கிறிஸ்டியான் போன்ற கள்ளபோதகர்கள் எழும்பி நீதியின் ஊழியக்காரனுடைய, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு தங்களுக்கும் ஒரு பெரிய ஊழியம் உண்டு எனக் கூறி தங்களை மிகைப்படுத்தி, தங்களை விளம்பரப்படுத்தி, தங்களை பெரியவர்களாக காண்பித்தார்கள். இவர்கள் யாவரும் இக்காலத்துக்குரிய செய்தியை விசுவாசிக்கிறவர்களாகவே கூறினார்கள். ஆனால் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற தேவசத்தத்துக்கு தங்கள் காதுகளை செவிடாக்கிகொண்டார்கள். பாருங்கள் இவர்கள் விசுவாசிக்கும் செய்தியை கொண்டு வந்த தீர்க்கதரிசி ***கர்த்தர் உரைக்கிறார்*** இனி எனக்கு பிறகு களத்தில் யாரும் இல்லை என கூறியபின், இவர்கள் தங்களுக்கு ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்த முயற்சித்தது ஏன்? சகோ. ஜோசப் பிரன்காமுக்கும் ஒரு பதவியை சிலர் தேடுவது ஏன்? பாருங்கள் ***கர்த்தர் உரைக்கிறார்*** இனி எனக்கு பிறகு யாரும் இல்லை என நீங்கள் விசுவாசிக்கும் தீர்க்கதரிசி ***தேவனுடைய சத்தத்தை*** உங்களுக்கு கொடுத்தப்பின் நீங்கள் அந்த சத்தத்துக்கு புறம்பாக உங்களை மேன்மைப்படுத்துவது என்ன? வேறொருவரை எதிர்ப்பார்ப்பது என்ன? கர்த்தர் உரைக்கிறார் என்று கூறிய பின் அது குறித்து நாம் வாய் திறந்து எதுவும் பேசக்கூடாதே! அதை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமே! வாய் திறப்பது உங்கள் அவிசுவாசத்தை தானே எடுத்துக் காட்டுகிறது. மேற்கூறியவர்கள் வார்த்தைக்கு புறம்பாக உபதேசித்து வருவதால், சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததால் இவர்களை ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள் என எழுதுகிறேன்.

**18.** சென்னை, நுங்கம்பாக்கத்தில் ஒரு கோமாளி தான் பரிசுத்தஆவியை பெறவில்லை, தான் ஒரு பாவி என்று தன்னை குறித்து அறிக்கைவெளியிட்டுக் கொண்டு, தன்னுடைய பொருளாதார செல்வாக்கு, ஆனவம், வெகுளிதனத்தின் நிமித்தம் தேவையற்ற காரியங்களை அவ்வப்பொழுது எழுதி துண்டுப்பிரதிகள் விநியோகித்துக்கொண்டு, செய்தியிலுள்ள மக்களை சோரம்போக்கி வருகிறார். இந்த சகோ.தேவநேசன் இனி மத்.25:6 சத்தத்தை உடைய ஒரு நபர் வந்து நித்திரை மயக்கத்திலுள்ள கன்னிகைகளை தெளிவடைய வைக்க, நித்திரை மயக்கத்திலிருந்து அவர்களை எழுப்ப வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை வெளியிட்டு, மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணி, தனக்கு ஓரிரு சகாக்களை பல்லக்கு தூக்க வைத்து ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஜனங்களுக்கு இந்த ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற தேவ சத்தம் பிரயோஜனமாயிருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

**19.** ஆக முற்றிலுமாக இந்த ***கோல்டன் நக்கெட்ஸ்சை*** நம்பி இருந்துவிடக்கூடாது, தீர்க்கதரிசியின் செய்தியிலும் இதை கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில் இருந்துக்கொண்டு வந்தது. மேலும் இந்த செய்தி ஆங்கிலத்திலும் வரவில்லை, தமிழிலும் மொழிபெயர்க்கப்படவில்லை. ஆதலால் ஆங்கில செய்தி டேப்பில் இது குறித்து உறுதிப்படுத்த முடிவு செய்தேன். 16-3-2004 அன்று VGR சென்று அந்த செய்தி டேப் பெற்று வந்தேன். செய்தியை போட்டுக் கேட்டேன் அது முற்றிலும் சரியாக இருந்தது. அப்பொழுதுதான் எனக்கு மனதில் திருப்தி ஏற்பட்டது. இனி அந்த டேப்பை VGR க்கு கொடுக்காமல், ஆதாரத்துக்காக அதை என் வசம் வைத்துக்கொள்ள நினைத்தேன். அதன்படி சில காலம் தக்கவைத்தும் கொண்டேன்.

***20.*** ஆனாலும் அதை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று VGR யிடமிருந்து எனக்கு நினைப்பூட்டும் கடிதங்கள் வந்துகொண்டிருந்தது. ஆனாலும் என் நிலையை அங்குள்ள சகோதரியிடம் சொல்லி சொல்லி தட்டி கழித்து வந்தேன். இந்நாட்களில் கர்த்தருடைய வேளை வந்தது. எனக்கு தீர்க்கதரிசியின் அனைத்து பிரசங்கங்களையும் கொண்ட சி.டி. (C.D.) கிடைத்தது. ஆதலால் சி.டி.யிலிருந்து இந்த செய்தியை பிரிண்ட் எடுக்க முயற்சித்தேன். அதற்கும் வேளை வந்தது. இக்காரியத்தில் என் மகன் எனக்கு உதவினான். செய்தியை பிரிண்ட் எடுத்தேன். நான் அந்த செய்தியை வாசித்தப்போது அதில் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்று கூறப்பட்ட அந்த ***தேவசத்தம்*** தலை கீழாக முற்றிலுமாக மாற்றப்பட்டு பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது. அதாவது ***When I 'm gone என்பது Till I'm gone என்று பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது.***

**21.** பாருங்கள் தீர்க்கதரிசியின் பிரசங்கம் கீழ்க்கண்டவாறு:
**There 'll never be another on the field when I'm gone, Thus Saith the Lord. There has not been and will not be.**

**நான் சென்ற பிறகு இந்த களத்தில் ஒருபோதும் வேறொருவர் இருக்க போவது இல்லை. இது கர்த்தர் உரைக்கிறார். இதுவரை யாரும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்க போவதில்லை.**

*22. ஆனால் குட்டிச் சாத்தான் குள்ளநரி வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ் குள் நுழைந்து இந்த கர்த்தர் உரைக்கிறார் என்ற தேவனுடைய சத்தத்தை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்து விட்டான். அவன் அதை யாரும் கண்டுக்கொள்ளமாட்டார்கள் என் நினைத்திருக்கலாம். ஆனாலும் தேவன் அதற்குரிய நபரை வைத்திருப்பதை அவன் அறியவில்லை போலும். There'll never be another on the field till I'm gone. அதாவது நான் போகும் வரை இந்த களத்தில் வேறு யாரும் இருக்கபோவதில்லை, இது கர்த்தர் உரைக்கிறார் என்று மாற்றி விட்டான். இதன்படி ஏழாம் சபைக் கால தூதன் செய்திக்கு பிறகு மற்றொருவர் எழும்பி பிரகாசிக்கலாம் என்பதாகும். ஆக சகோ.பிரன்காமுக்கு பின் வேறொருவர் இருப்பதில்லை, இது கர்த்தர் உரைக்கிறா என்பதை சகோ.பிரன்காமுக்குப் பின் வேறொருவர் இருக்கலாம், இது கர்த்தர் உரைக்கிறார் என பிசாசு வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ் மூலம் மாற்றிவிட்டான். இவர்கள் சகோ.ஜோசப் பிரன்காமுக்கு சகோ.வி.ம.பிரன்காமுக்கு பிறகு வழி திறந்து கொண்டிருக்கிறார்களோ? ஆவிக்குரியவர்கள் இது எவ்வளவு ஒரு பெரிதான பொய், கொடிதான வஞ்சகம் என்பதை அறிவார்கள்.*

23. ஆம் பிரியமானவர்களே, இது ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம் என்பதை தீர்க்கதரிசியின் செய்திகளில் நீங்கள் தியானித்திருப்பீர்கள். அதை நான் மீண்டும் மீண்டும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். VGR ஐ முற்றிலுமாக நம்ப முடியவில்லை. இது ஏழாம் சபை தூதனுடைய பிரசங்கங்களை, அவர் பிரசங்கித்தப் பிரகாரமாக பிரிண்ட் செய்வதில்லை. அவருடைய பிரசங்கங்களை கூட்டியும், குறைத்தும் பிரிண்ட் செய்து வருகிறார்கள். அதை கர்த்தர் ஏற்றவேளையில் தன்னுடைய மணவாட்டிக்கு வெளிப்படுத்தி வருகிறார். ஏனென்றால் அவளை யாரும் வஞ்சிக்க முடியாது, ஏமாற்ற முடியாது. VGR ஏழாம் தூதனுடைய சத்தத்தை ஒரிஜினல் டேப்களிலிருந்து அதில் எந்த விதமான மாற்றங்களும் இல்லாமல், அதை அப்படியே பிரிண்ட் செய்து உலகம் முழுவதும் விநியோகிக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அதை கூட்டியும் குறைத்தும் வெளியிடுகிறார்கள் என்பதை மேற்கண்ட இருசாட்சிகள் மூலம் திருஷ்டாந்தப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா! சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும். 2கொரி.13:1 நிலைவரப்படுத்தப்பட்டது.

24. *வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்* பிசாசின் கண்ணியில் விழுந்து விட்டதால் இனி அது வெளியிடும் ஏழாம் தூதன் சத்தத்தை ஆங்கில புத்தகங்களில் தியானிக்கும்போது நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒருவன் தேவனால் தெரிந்துகொள்ளப்படவில்லையென்றால் நிச்சயமாக இவர்களால் வஞ்சிக்கப்படுவான். ஆனால் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை இவர்கள் ஒருக்காலும் வஞ்சிக்க முடியாது.

25. வேலி பயிரையே மேயும் காலமாக இது இருக்கிறது. வேலியை நம்பமுடியவில்லை. ஆதலால் பயிர்கள் தங்களை தாங்களே காத்துக்கொள்ளவேண்டிய நிலையிலிருக்கிறது. இக்காலத்துக்குரிய செய்தியை அது கொடுக்கப்பட்ட விதமாக கொண்டு வருகிறோம் எனக் கூறும் VGR ஐ நம்ப முடியவில்லை. நாங்கள் இக்காலத்துக்குரிய செய்தியை சுமந்து வருகிறோம் எனக் கூறும் பாஸ்டர்களையும் நம்பமுடியவில்லை. நீங்கள் சார்ந்து இருக்கும் சபை அசுத்த ஆவிகளின் குடியிருப்பாக இருப்பதால் அதையும் நம்ப முடியவில்லை. ஆதலால் பிரியமானவர்களே, நீங்கள் தேவனை மட்டும் சார்ந்திருங்கள் அவரே உங்கள் நம்பிக்கை. அவரால் மட்டும் உங்களை இந்த வஞ்சக காலத்திலிருந்து தப்புவிக்கமுடியும். ஆதலால் உங்கள் ஐக்கியத்தை பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் வைத்துக்கொண்டால் மாத்திரமே நீங்கள் உங்களை இந்த வஞ்சக காலத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வீர்கள்.

26. இப்பொழுது இங்கு இன்னொரு முக்கியமான காரியத்தையும் குறித்து எழுத தேவஆவியினால் தூண்டப்படுகிறேன். பிரியமானவர்களே, நான் உங்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணி இதை எழுதுகிறேன். இதற்கு முன்பும் இது குறித்து ஓரிரு முறை சுருக்கமாக எழுதியுள்ளேன். நான் இது குறித்து திரும்ப திரும்ப எழுதுவது உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாயிருக்குமென நினைக்கிறேன். *அதாவது லவோதிக்கேயா சபை தூதன், தீர்க்கதரிசி, சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமினால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகளுக்கு Voice of God - தேவ சத்தம் என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். இது ஒரு தேவதூஷணம்.* இப்பெயர் சூட்டப்பட்டதற்கு சகோ.ஜோசப் பிரன்காம் முக்கிய காரணம். பாருங்கள், சகோ.பிரன்காம் 1931 முதல் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார். 1946-ல் சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தார். 1950 முதல் அவரது பிரசங்கங்கள், போதனைகள், தரிசனங்கள், உபதேசங்கள் யாவும் ரெக்கார்டிங்ஸ் செய்யப்பட்டது. 1965 வரை சுமார் 1215 பிரசங்கங்கள் ரெக்கார்டிங்ஸ் பண்ணப்பட்டதாக தெரிகிறது. இவைகள் யாவும் *தேவசத்தம்* என்று கூற முடியுமா? ஆவிக்குரியவர்கள் சிந்திக்கடவர்கள். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். 1கொரி.2:15.

*27. பாருங்கள், தேவசத்தம் - இது சர்வத்துக்கும் வல்ல தேவன் பேசுகையில் உண்டான சத்தம். அதாவது இது தேவன் தம்முடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளோடு, அவர் தெரிந்தெடுத்து பயன்படுத்தும் பாத்திரங்களோடு நேரிடையாக பேசுவது ஆகும். இது குறித்து சகோ.பிரன்காம் கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார். தேவனுடைய சத்தம் - அது உறுதிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசிக்குள் இருந்தது. அது தேவனுடைய சத்தம் என்று இன்றைக்கு எப்படி அறிந்து கொள்வது என்றால், அது தீர்க்கதரிசியின் வார்த்தையின் வெளிப்படுதலாய் அமைந்திருக்கும். உண்மையான தேவனுடைய சத்தம் உண்மையான, ஜீவிக்கிற, இயற்கைக்கு மேம்பட்ட தேவனையும், இயற்கைக்கு மேம்பட்ட அவருடைய வார்த்தையையும் திரும்ப கொண்டு வந்து, உண்மையான வார்த்தையை இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் வெளிப்படுத்தும். அதன் மூலம் அது தேவனுடைய சத்தம் என்று நாம் அறிந்து கொள்கிறோம். (இந்த கடைசி காலத்தில் தேவனுடைய சத்தம், பத்தி 32, நாள் 20-1-1963)*

28. இப்பொழுது வேத வாக்கியங்களின் அடிப்படையில் தேவனுடைய சத்தம் உண்டானது குறித்து காண்போம்.

அ) ஆதாம், தேவகுமாரன் (Adam, who was the son of God) லூக். 3:38 இவன் தேவனுடைய சத்தத்தைக் கேட்டான். தேவனோடு உறையாடினான். தியானியுங்கள் ஆதி.3:8-19

ஆ) தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாயிருந்தவனாகிய மோசே தேவனுடைய சத்தத்தைக் கேட்டான். இருவரும் உறையாடினார்கள். யாத். 3:2 - 4:17. மோசே அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய

சத்தத்தைக் கேட்டான். மோசே தன்னோடே பேசுகிறவர் சத்தத்தை சாட்சி பெட்டியின் மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்து உண்டாக கேட்டான். அங்கே இருந்து தேவன் அவனோடே பேசுவார். எண்.7:89. ஆம், தேவனுடைய சத்தம் மோசேக்கு உண்டாயிற்று. அப்.7:32. மோசே பேசினான். தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார். யாத்.20:1, 29:19,20.

இ) பூமி அதிர்ச்சிக்குப் பின் அக்கினி உண்டாயிற்று. அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்கு பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. அதை எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது இதோ, எலியாவே இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அதன் பின் எலியா கர்த்தரோடும், கர்த்தர் எலியாவோடும் பேசினதை நாம் 1இராஜா. 19:12-18 வசனங்களில் வாசிக்கிறோம்.

ஈ) பேதுரு, இடிமுழக்க மக்களாகிய யாக்கோபு, யோவான் அதாவது தூண்களாக எண்ணப்பட்ட இந்த மூவரும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள்.மத்.17:1-5

உ) அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவுக்கு அன்பாயிருந்தவன், அவர் மார்பிலே சாய்ந்திருந்தவன் தேவனுடைய சத்தத்தை எக்காளம் சத்தம் போன்று பெரிதான ஒரு சத்தமாக கேட்டான். வெளி.1:10.

ஊ) யோபு, உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகியிருந்தவனுமாகிய இவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்று தேவனால் சாட்சி பெற்றவன் கர்த்தருடனும், கர்த்தர் அவனிடமும் பேசினதை நாம் யோபு 40அதி, 41 அதி மற்றும் 42வது அதி. களில் வாசிக்கிறோம்.

எ) ஜனங்களும் தேவனுடைய சத்தத்தை கேட்டார்கள். அந்த சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அது இடிமுழக்கம் போன்றிருந்தது. யோ.12:28,29

ஏ) ஏழாம் சபை தூதன், தீர்க்கதரிசி, சகோ.வி.ம. பிரன்காம் ஓகியோ நதிகரையில் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார். இது குறித்து உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆதலால் இது குறித்து மீண்டும் நான் இங்கு எழுத வேண்டிய தேவையில்லை.

ஐ) புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தை அறிவிக்கிறதற்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாகிய பவுல் தேவனுடைய சத்தத்தைக் கேட்டான். இது குறித்து நீங்கள் அப்.9:3-7 வசனங்களில் வாசிக்கலாம்.

ஒ) அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தை பற்றி கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார். சங்.99:6,7.

29. வேதவாக்கியங்களின் அடிப்படையில் நாம் தியானிக்கும் போது தேவனுடைய சத்தத்துக்கும், தேவனுடைய ஆவியினால் ஒருவர் ஏவப்பட்டு பேசுவதற்கும், தேவஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கிப்பதற்கும் சற்று வித்தியாசங்கள் உண்டு. இதில் நாம் குழம்பக்கூடாது. தேவனுடைய சத்தம் - தேவன் தம்முடைய பாத்திரங்களோடும், தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள் தேவனோடும் உரையாடுவதாகும். பாத்திரம் தேவனுடைய சத்தத்தை கேட்கிறான். அவனுக்கு தேவன் மறுமொழி கொடுக்கிறார். இருவரும் சம்பாஷிக்கிறார்கள். இருவரும் முகமுகமாக ஒருவருக்கொருவர் வார்த்தையை பகிர்ந்து கொள்கிறார்கள். பேதுரு தேவசத்தத்தைக் கேட்டான். பின் ஆவியானவர் அவனோடு இடைப்பட்டார். இதை நாம் அப்.11:7-12 வசனங்களில் தியானிக்கலாம்.

30 அடுத்துப் பாருங்கள், வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தியானியுங்கள் 2தீமோ.3:16 தேவனுடைய மனுஷர்கள் தேவஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கித்தார்கள். உள்ளத்தின் ஆழத்தில் தேவஆவியினால் தூண்டப்பட்டு பேசினார்கள், நிருபங்களை எழுதினார்கள். பல குறிப்புக்களை சேகரித்தும் எழுதினார்கள். அதில் தேவஆவியின் வழிநடத்துதல் இருந்தது. நானும் தேவ ஆவியினால் இருதயத்தின் ஆழத்தில் தூண்டப்பட்டு உங்களுக்கு இந்த செய்தித்தொகுப்புகளை எழுதுகிறேன். நான் தேவனுடைய சத்தத்தை கேட்டு, கேட்டு எழுதுகிறேன் என்று என்னால் கூறமுடியாது. ஆனால் தேவஆவியின் தூண்டுதலினால் எழுதுகிறேன, அது உள்ளத்தின் ஆழத்தில் ஒரு தூண்டுதல் என்று நிச்சயமாக கூறமுடியும்.

**31. ஒருவர் பிரசங்கம்பண்ணும்போது தேவஆவியினால் ஏவப்பட்டு பேசுகிறார். அத்துடன் தேவனுடைய சத்தத்தையும் கேட்கிறார். அதோடு மட்டுமல்ல அவர் பிரசங்கத்தில் தேவனுடைய ஞானத்திற்கும், சுயஞானத்திற்கும், மனுஷ ஞானத்திற்கும், அவருடைய சுயகருத்துக்களுக்கும், யோசனைகளுக்கும், சில பிரசித்திப்பெற்ற ஊழியர்களின் பிரசங்கத்திலிருந்து எடுத்த பிரசங்க குறிப்புகளுக்கும், அனுபவத்தினால் பெற்ற அறிவு திறனுக்கும், பேச்சு திறமைக்கும் அதில் இடம் உண்டு. அதாவது ஒருவருடைய பிரசங்கத்தில், தேவனுடைய ஜீவனுள்ள ஆவியும் மனுஷனுடைய ஆவியும் இடைபடுகிறது. அது யாரும் மறுக்க முடியாது. பிரசங்க ஆரம்பம் முதல் முடிவு வரை தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியினால் பேசினார் என கூறவே முடியாது.**

32. தீர்க்கதரிசி என்பவன் ஒரு பிரசங்கி. தீர்க்கதரிசி என்னும் சொல் பரிசுத்தஆவியின் ஏவுதலால் பிரசங்கிக்கும் ஒருவர் என்று பொருள்படும். ***(இந்த கடைசி நாட்களில் தேவனுடைய சத்தம்,*** பத்தி. 62, நாள். 20-1-1963) கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை கொண்டு தம்முடைய ஜனங்களோடு பேசுகிறார். எரே.42:1-4 எரே. 26:2. தேவனாகிய கர்த்தருடைய வார்த்தையை எரேமியா தேவனுடைய ஜனங்களுக்கு சொன்னான். எரே.43:1-6.

33. பொதுவாக பிரசங்கம் என்றால் தேவாலயத்தில், சபையில், பொதுகூட்டங்களில் கூடியிருக்கும் விசுவாசிகளுக்கு, பொது ஜனங்களுக்கு வேதவாக்கியங்களிலிருந்து ஓரிரு வசனத்தை அல்லது ஒரு பகுதியை எடுத்து வாசித்து, அதற்கு ஒரு பொருள் கொடுத்து, அதன் பேரில் சொற்பொழிவு ஆற்றுதலாகும். இதை பலர் பலவிதமாக அழைக்கிறார்கள். இதை அருளுரை என்றும் திருவுரை என்றும், சமயஉரை என்றும் அழைக்கிறார்கள்.

34. பிரசங்கி என்றால் தூதுவன் என்று பொருள். பிரசங்கம் என்றால் அது கிறிஸ்துவை பற்றி பிரசங்கிப்பது ஆகும். பிரசங்கத்தின் பொருள் என்றும் மாறாது. அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று பிரசங்கிப்பதாகும். எபி.13:8 அவன் தன் கருத்துக்களை கூறாமல், தனக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தைக்குரிய செய்தியை அறிவிப்பவன் ஆகும். தேவனுடைய

இராஜ்யத்துக்குரிய நற்செய்தியை கூறி பிரசங்கிப்பவன் ஆகும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பவன் ஆகும். லூக் 8:1, மத்.9:35, அப். 20:25 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய விசேஷங்களை உபதேசிப்பவன் ஆகும். அப்.28:31 கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதே சுவிசேஷம் 1கொரி.15:3, 13-17. தேவனுடைய வசனத்தை முழு தைரியத்தோடு சொல்லுவதே பிரசங்கம். அப்.4:30 பிலி.1:14, எபி.13:7 தேவவசனத்தை கலப்பாய் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும் பிரசங்கிப்பதே பிரசங்கம். 2கொரி.2:17. ஆதலால் பிரசங்கம் ஒருவன் யோசித்து தீர்மானம் செய்துள்ள ஒன்றை பிரசங்கிப்பதாக இருக்ககூடாது. அது ஒருவனுடைய இரட்சிப்பு, அழிவு இவைகளை நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கிறது. பிரசங்கம், பிரசங்கியின் திறமையை பொறுத்தது அன்று. ஆதலால் அவர் தன்னில் தானே ஒன்றும் இல்லை. அவர் தேவனுடைய இராஜ்யத்துக்குரிய செய்தியை சுமப்பவர். ஆதலால் அதற்குரிய அதிகாரத்தையும் கொண்டவர். பாருங்கள், அப்போஸ்தலர்கள் அவர்களாகவே சுவிசேஷத்தை பிரசங்கிக்கவில்லை. மாறாக சுவிசேஷத்தை பிரசங்கிக்க தேவனால் அனுப்பப்பட்டவர்களாயிருந்தார்கள். மத். 10வது அதி, ரோ.10:13-17 இன்று சுவிசேஷகர்களை பாஸ்டர்கள் நியமித்து ஊழியத்திற்கு அனுப்புகிறார்கள். இந்த வெட்கக்கேட்டை என்ன என்று சொல்லுவது? நம்முடைய சபைகள் அனைத்திலும் இது தான் நடைமுறையில் உள்ளது. ஆதலால் தான் நம்முடைய சபைகள் அசுத்தஆவியின் கூடுகளாக இருக்கிறது என்கிறேன்.

35. அவ்வாறாகவே ஐந்து வகை ஊழியத்தில் உள்ள யாவரும் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் தங்களை தாங்களே ஐந்து வகை ஊழியத்தில் ஒன்றுக்கு ஏற்படுத்திக்கொள்ளமுடியாது. ஆனால் இது கொடிதான வஞ்சிப்பின் காலமாக இருப்பதால் பலர் தங்களை தாங்களே ஐந்து வகை ஊழியங்களில் ஒன்றில் இணைத்துக்கொண்டு, தங்களை கர்த்தர் ஏற்படுத்தினார் என பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறி தங்கள் காரியங்களை சமாளிக்கிறார்கள். அநீதத்தின் கூலியை விரும்பி உறுதியில்லாத ஆத்துமாக்களை கொண்டு ஒரு தொழில், ஊழியத்தின் பேரில் செய்கிறார்கள்.

36. ஒருவர் தேவனால் அனுப்பப்படுவது குறித்து நீங்கள் ரோ.10:15-ல் வாசிக்கலாம். அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? பாருங்கள் பிரசங்கிக்க ஒருவர் தேவனால் அனுப்பப்படவேண்டும், ஏற்படுத்தப்படவேண்டும். ஆனால் இன்று நடைமுறையில் இருப்பது என்ன? ஒருவர் தன் பேச்சு திறமையினால், ஜனங்களை வசீகரிக்கும் தன்மையினால் ஒரு சில கூட்ட ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்கிறார். தன்னை பாஸ்டர் என பிரகடனம் செய்து கொள்கிறார். பின் தன் வாரிசுகளை பாஸ்டர் பதவிகளுக்கு பழக்குவிக்கிறார். பின் மற்றொரு கூட்டத்தை தந்திரமாய் ஆதாயப்படுத்துகிறார். அங்கு தன் வாரிசுகளை பாஸ்டராக்குகிறார். இப்படியாக ஒரு குடும்பத்தில் ஒரு பாஸ்டரின் அனைத்து வாரிசுகளும் தங்களை தாங்களே பாஸ்டராக்கி கொள்ளுகிறார்கள். இது என்ன? பிசாசு. இவர்கள் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறவர்கள். தங்கள் பிழைப்புக்காக கிறிஸ்துவின் ஊழியம் என்ற பெயரில் ஒரு தொழில் செய்து வருகிறார்கள்.

37. ஒரு பிரசங்கி தன்னைப் பற்றி பிரசங்கத்தில் பிரசங்கிக்கவே கூடாது அவருடைய பிரசங்கங்கள் யாவும் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கிக்கப்படுகிறதாக இருக்கவேண்டும். அப்பொழுது அவருடைய பிரசங்கமானது தேவனுடைய வார்த்தையாக இருக்கும். அது அவருடைய பேச்சுதிறமையை பொறுத்ததாக இருக்காது. தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதே பிரசங்கம். அப். 4:31, பிலி. 1:14.

*38. இப்பொழுது கவனியுங்கள். சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் அனைத்தும் தேவனுடைய சத்தம் (வாய்ஸ் ஆப் காட்) என்று கூற முடியாது. அவர் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு கேட்டு ஜனங்களுக்கு பிரசங்கிக்கவில்லை. அறிவிக்கவில்லை, உபதேசிக்கவில்லை. மேலும் அவருடைய பிரசங்கங்கள் முழுவதும் தேவஆவியினால் அருளப்பட்டது என்று கூற முடியாது. தேவஆவியில் ஏவப்பட்டு பேசினார், பிரசங்கித்தார் என்று கூறவும் முடியாது. ஆனாலும் அவருடைய பிரசங்கங்கள் முற்றிலுமாக மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. இதை யாரும் மறுக்க முடியாது.*

39. தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு, தேவனாகிய கர்த்தர் அனுப்பிய தீர்க்கதரிசி அந்த வார்த்தைகளை கர்த்தர் உரைக்கிறார், சொல்லுகிறார் என ஜனங்களை நோக்கி கூறுகிறான். அவர் கர்த்தருடைய தூதன். அவன் ஜனங்களை நோக்கி கூறும் வார்த்தை தேவனுடைய தூது. தியானியுங்கள். ஆகாப்1:12,13 பாருங்கள் சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் யாவும் கர்த்தர் அனுப்பிய தூது என்று கூறமுடியாது. ஆதலால் தொடக்க நாட்களில் அவருடைய பிரசங்கங்களுக்கு *உரைக்கப்பட்ட வார்த்தை, வில்லியம் மாரியன் பிரன்காம்* என தலைப்பு கொடுத்தார்கள். ஒரு வகையில் அது சரியாக இருந்தாலும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் அதுவும் சரியான தலைப்பு இல்லை.

40. ***இதைவிட ஜீவவார்த்தையின் அடிப்படையில் ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே வெளி.10:6 என்ற தலைப்பே முற்றிலும் சரியானது. இது ஒன்றே வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்ட தலைப்பு ஆகும். உதாரணமாக யோவான்ஸ்நானன் வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருந்தான். யோ.1:23 மத்.3:3, மாற்.1:3, லூக்.3:5. அவ்வாறாகவே சகோ.பிரன்காம் ஏழாம் தூதனுடைய சத்தமாக இருந்தார். அவருடைய பிரசங்கங்களுக்கு இந்த தலைப்பை விட்டுவிட்டு வேறு எந்த தலைப்பும் வேதவாக்கியங்களுக்கு புறம்பானது. அது பிசாசு ஆகும்.***

41. ***இப்பொழுது சற்று இங்கு கவனியுங்கள். சகோ.பிரன்காமின் பிரசங்கங்களில் தவறுகள் உண்டு. அதை அவர் திருத்துகிறார். இன்னும் அவருடைய பிரசங்கங்களில் யூகங்கள் உண்டு, கணிப்பு உண்டு, சொந்த கருத்து உண்டு. அநேகருடைய பிரசங்கங்களிலிருந்து எடுத்த குறிப்புகளும் உண்டு. ஆனால் இவைகள் மத்தியில் அவருடைய பிரசங்கங்களில் தேவனுடைய சத்தம் உண்டு, தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு பேசிய, பிரசங்கித்த, உபதேசித்த காரியங்கள் உண்டு. நான் பொதுவாக இங்கு குறிப்பிட ஏவப்படுவது என்னவென்றால்***

***சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் முற்றிலும் தேவனுடைய சத்தம் அல்ல, தேவஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கம் செய்யப்பட்டதும் அல்ல. மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளும் உண்டு. பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளும் உண்டு. ஆதலால் அவருடைய பிரசங்கங்களுக்கு தேவனுடைய சத்தம் என்று பேரிடப்பட்டிருப்பது லௌகிக ஞானம், அது ஜென்ம சுபாவத்திற்குரியது. அது பேய்த்தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது. நான் எழுதியதை ஆவிக்குரியவர்கள் நன்கு தியானிப்பார்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.***

*42.* ***சகோ.பிரன்காமின் பிரசங்கங்களுக்கு தேவனுடைய சத்தம் என்ற தலைப்பு விஜிஆர்ல் பணிபுரிகிறவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். விஜிஆர்யிடமிருந்து உதவி பெறுகிறவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கலாம். சகோ.ஜோசப் பிரன்காமின் காவடிகள் ஆமோதிக்கிற ஒரு தலைப்பாக இருக்கலாம். ஆனால் ஒரு தேவனுடைய மனுஷன், பரிசுத்த ஆவியை பெற்ற ஒரு மனிதன், ஒரு ஆவிக்குரியவன் இந்த தலைப்பை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளவே மாட்டான். இவர்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. கலா.1:7***

43. சகோ.பிரன்காமின் முழு பிரசங்கங்களுக்கு ***தேவனுடைய சத்தம்*** என்று பேரிடப்பட்டிருப்பது ஒரு சாத்தானின் வஞ்சிப்பு. ஏனென்றால் இது அனைத்து சபை காலங்களிலும் காணப்படாத ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம். தேவனுடைய பிள்ளைகளை ஏமாற்ற பிசாசின் தந்திரங்கள் நிறைந்த காலம். ஆனாலும் தேவனுடைய பிள்ளைகள் வஞ்சிக்கப்படமாட்டார்கள்.

44. அடுத்து வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. 2தீமோ.3:16. சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் யாவும் தேவஆவியினால் அருளப்பட்டது எனவும் கூறமுடியாது. ஏனென்றால் அவருடைய பிரசங்கங்களில் அனுமானத்தின் பேரில் முன் உரைத்த காரியங்கள் உண்டு. அவ்வாறு முன்உரைத்ததில் நடக்காத காரியங்களும் உண்டு. ஆதலால் அவருடைய அனைத்து பிரசங்கங்களும் தேவஆவியினால் அருளப்பட்டது என்று கூறவே முடியாது. தேவஆவியினால் பேசுகிறார் என்றால் அங்கு அனுமானத்தினால் முன்னுரைக்கப்பட்டதும் நடைபெறவேண்டும். அது நடக்காத பட்சத்தில் அந்த அனுமானத்தினால் முன்னுரைத்தது மனுஷஞானம் ஆகும். அது அவருடைய யூகம் ஆகும். அது மனுஷ ஆவியினால் உண்டான ஒரு ஏவுதல் ஆகும். ***அனுமானமாக (Predict) முன்னுரைக்கிறேன் என்ற வார்த்தையை நீங்கள் வேதவாக்கியங்களில் எங்குமே காணப்படாத ஒன்றாகும்.*** பாருங்கள் சகோ.பிரன்காம் ***இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்***, பாகம் 2, பக்கம் 833, பத்தி 43-ல் கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார்.
அவர் எனக்கு காண்பித்த ஒரு தரிசனத்தின் அடிப்படையிலும், காலமானது முன்னேறி சென்றுக்கொண்டிருக்கிறதான அடிப்படையிலும், அது 1933-க்கும் 1977-க்கும் இடையில் இருக்கலாம் என்று அனுமானத்தின் பேரில் முன்னுறைக்கிறேன். இந்த மகத்தான தேசமானது ஒரு யுத்தத்திற்கு சென்று அதனால் அது தூள் தூளாக நொருங்கிவிடும். அது மிகவும் சமீபமாயிருக்கிறது. பயங்கரமான விதமாக சமீபமாயிருக்கிறது. ***நான் அனுமானத்தின் பேரில்தான் முன்னுறைக்கிறேன் எனவே நான் தவறாக இருக்கக்கூடும் என்கிறார்.***

45. ***பாருங்கள் ஒரு தீர்க்கதரிசியினுடைய இப்படிப்பட்டதான அனுமான முன்னறிவிப்பை நீங்கள் வேதவாக்கியங்களில் எங்கும் காணமுடியாது. இப்படிப்பட்ட அனுமானம் முன்னறிவிப்புகளுக்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரம் இல்லை. ஆதலால் இப்படிப்பட்ட மனுஷனுடைய சத்தத்திற்கு, அனுமானத்திற்கு, யூகத்திற்கு நீங்கள் தேவனுடைய சத்தம் என்று பெயரிட முடியாது. அது தேவதூஷணம். தேவனுடைய சத்தத்தில் எங்கும், எதிலும் அனுமானத்தின் பேரில் முன்னறிவிப்புக்கு இடமேயில்லை. ஏனென்றால், என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பி வராமல் அது நான் விரும்புகிறதை செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். தியானியுங்கள். ஏசா.55:11. ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய சத்தம், அது புறப்பட்டு சென்று அதன் காரியத்தை வாய்க்க செய்யும். அது தவறாமல் நடக்கும். அந்த அனுமான முன்னறிவிப்பு தவறாமல் நடக்கவேண்டும்.***

46. நான் வியாதியஸ்தரை சுகப்படுத்தவில்லையா? உனக்கு நான் முன்னுரைத்த யாவும் அப்படியே பிழையற்று நிறைவேறவில்லையா? உங்கள் போதகர் இவைகளை செய்யமுடியாது. அவர் சாதாரண ஒரு மனிதன். கர்த்தராகிய நானே இவைகளை செய்தேன். நான் தான் அவர் மூலம் எல்லாவற்றையும் அறிவிக்கிறேன். அவர் அல்ல, அது என்னுடைய சத்தம். நான் நான்தான் மரித்தோரை உயிரோடெழுப்புகிறேன்... என்று கூறுகிறார் அவர். (*முறையிடுகிறது என்ன? சொல்!* பக்கம் 59, கடைசி பத்தி, நாள். 14-7-1963) பாருங்கள் ***அது தேவனுடைய சத்தமாயிருக்குமானால், தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டதாக இருக்குமானால் அவர் முன்னுரைத்த யாவும் பிழையற்று நிறைவேறவேண்டும். நிறைவேறாவிட்டால் அவர் தன் யூகத்தில், தன் ஞானத்தினால் அதை கூறினார் என்று தானே பொருள்.*** ஆம் பிரியமானவர்களே, அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தை வெறுமையாய் திரும்பாது. அது தான் *தேவசத்தம்.* தேவஆவியினால் ஏவப்பட்டு கூறுவது ஆகும்.

47. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதைப் பாருங்கள், நான் கட்டளையாக சொல்லாமல், யோசனையாக சொல்லுகிறேன் என்கிறான். அவன் இதை நான் அல்ல கர்த்தர் கட்டளையிடுகிறார் என்கிறான். மேலும் இதை கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறேன் என்கிறான். என் அபிப்பிராயத்தை தெரியப்படுத்துகிறேன் என்கிறான். ஏனென்றால் என்னிடத்தில் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன் என்கிறான். 2கொரி.8:10, 1கொரி.7:6,10,12,25,40. இது தான் தேவனுடைய ஆவியினால் ஏவப்படுதல் ஆகும். அவன் எதையும் தன்னுடைய அனுமானத்தில் பேரில் பேசவில்லை, எழுதவில்லை, உபதேசிக்கவில்லை. அனைத்தையும் தேவனுடைய ஆவியினாலே பேசினான், பிரசங்கித்தான், உபதேசித்தான், அது தேவனுடைய சத்தமாயிருக்கிறது. ***பவுலின்***

***யோசனைகள் அபிப்பிராயங்கள் அனைத்தும் வேதவாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது. வானமும் பூமியும் ஒழிந்து போகும். ஆனால் அவன் கூறிய யோசனைகள், அவன் சொல்லிய அபிப்பிராயங்கள் ஒழிந்து போகாது. ஏனென்றால் அவைகள் யாவும் தேவனுடைய சத்தமாயிருக்கிறது.*** ஏனென்றால் ***நாங்கள் உங்களுக்கு சொன்ன வார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை. அதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி.*** 2கொரி.1:18. ஆம் என்றும் அல்ல என்றும் இல்லாமல், ஆம் என்றேயிருக்கிறது.

48. பாருங்கள் ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*** குறித்து எழு தேவதூதர்களை சந்தித்தார். அது குறித்து அவர்களிடமிருந்து கட்டளையும் பெற்றார். ஆனாலும் முதலாம் முத்திரை பிரசங்கிக்க தன்னை ஆயத்தப்படுத்தும் வேளையில் தன் பழைய பிரசங்க குறிப்புகளை எடுத்தார். டாக்டர்.ஸ்மித் என்பவரின் கருத்துக்களையும், இன்னும் அநேக பிரசித்திவாய்ந்த போதகர்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் தொகுத்தார். அவைகளை ஆதாரமாக கொண்டு முதலாம் முத்திரையை பிரசங்கிக்க நினைத்தார். ஆனால் அன்று பகல் 12 மணிக்கு பரிசுத்த ஆவி அவர் அறைக்குள் நுழைந்தார். அவர் தவறாக நினைத்திருக்கிற ஒன்றை திருத்தினார். மற்றப்படி அவர் அன்று முதலாம் முத்திரை குறித்து செய்தி கொடுக்கும்போது பயங்கரமான தவறு ஒன்றை பிரசங்கித்திருப்பார். இது குறித்து ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,*** மணவாட்டி கூடாரம் பதிப்பு, பக்கம் 125 கடைசி இரு பத்திகளை தியானியுங்கள்.

49. பாருங்கள் முதலாவது அவர் தேவஆவியினால் ஏவப்பட்டு தன் பிரசங்க குறிப்புகளை ஆயத்தம் செய்யவில்லை. முதலில் பல பிரசித்திப்பெற்ற பிரசங்கிகளின் கருத்துக்களை சேகரித்து ஒரு சாதாரண மனிதனைப் போன்று தன் பிரசங்க குறிப்புக்களை ஆயத்தம் செய்தார். இன்று பலர் அவ்வாறு தான் செய்கிறார்கள். பலருடைய பிரசங்க குறிப்புக்களை சேகரித்து தங்கள் பிரசங்கத்தை தயார் செய்தவதுபோன்று அவரும் செய்தார். பின்பு தான் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டு தன் தவறுகளை திருத்திக்கொண்டார்.

50. ***இதனால் தான் நான் எழுதுகிறேன் சகோ.பிரன்காம் தன் பிரசங்கங்களுக்கு முற்றிலுமாக தேவசத்தத்தை சார்ந்திருக்கவில்லை. முற்றிலுமாக பரிசுத்தஆவியின் ஏவதலையும் சார்ந்திருக்கவில்லை. அவர் பிரசங்கங்களில் பல பிரசித்திப்பெற்ற பிரசங்கிகளின் கருத்துக்களும், அவருடைய சுயகருத்துக்களும், எண்ணங்களும், சிந்தனைகளும் காணப்பட்டது. அதை நீங்கள் மறுக்கமுடியாது. ஆனால் பரிசுத்த வேதாகமம் முற்றிலும் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. அதில் மனுஷனுடைய கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும், அனுமானங்களுக்கும், அனுபவத்திற்கும் இடமேயில்லை. ஆதலால் பரிசுத்த வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்ட தேவனுடைய சத்தமாயிருக்கிறது. அதில் யாரும் ஒன்றை கூட்டவும் முடியாது, குறைக்கவும் முடியாது. ஒருவன் கூட்டி குறைத்தால் அவனுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்து போடப்படும். ஆனால் சகோ.பிரன்காமினால் பிரசங்கிக்கப்பட்ட பிரசங்கங்கள் முற்றிலுமாக அந்த தகுதிகளை*** **பெறமுடியாது. அவருடைய பிரசங்கங்களை** ***தேவனுடைய சத்தம்*** **என்பவன், அவன் யாராக இருந்தாலும் சரி. அவன் பிசாசே.**

51. நாம் வேதவாக்கியங்களை தியானிக்கும்போது தீர்க்கதரிசிகள் தங்களுடைய ஆவியின் ஏவுதலைக் கொண்டும், பரிசுத்த ஆவியின் ஏவதலைக் கொண்டும் பேசினார்கள் எனக் காண்கிறோம். தங்களுடைய ஆவியின் ஏவதலை பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசி. எசே.13:3. தாவீது : கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது என்கிறான். 2சாமு.23:2 தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறார். மாற்.12:36. யூதாசை குறித்து பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது. அப்.1:16. பாருங்கள் ஒரு காரியத்தை குறித்து பரிசுத்த ஆவி ஒருவர் மூலம் பேசினால் அது வேதவாக்கியம். அது நிறைவேறவேண்டும். தாவீது பரிசுத்தஆவியின் ஏவதலால் பேசினான். அது நிறைவேறியது. அதாவது ஒருவர் மேல் தேவனுடைய ஆவி. அவனுடைய வாயில் கர்த்தருடைய வார்த்தை. தியானியுங்கள். ஏசா.51:21 இதுவே தேவஆவியினால் ஏவப்பட்டு பேசுவதாகும். இது குறித்து மேலும் நீங்கள் நெகே.9:30, 2பேதுரு 1:22 ஐ தியானித்தால் அங்கு தேவனுடைய மனுஷர்கள் பரிசுத்த ஆவியனாலே ஏவப்பட்டடு பேசினார்கள் என காண்கிறோம். ஏனென்றால் பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறார். மத்.10:20 பாருங்கள், ஒருவனுக்குள் தேவனுடைய ஆவியானவர் இருந்து பேசுகிறார். அது தான் தேவஆவியினால் ஏவப்பட்டு பேசுவதாகும். 2 கொரி.13:3

52. உதாரணமாக அன்று சிமியோன் என்னும் பெயர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமிலிருந்தான். அவன் மேல் பரிசுத்தஆவி இருந்தார். கர்த்தராகிய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி பரிசுத்தஆவியின் ஏவதலினால் அவன் தேவாலயத்துக்கு வந்தான். அங்கு கர்த்தராகிய கிறிஸ்துவை கண்டான். பாருங்கள் தேவஆவியினால் ஏவப்படும் எதுவும் நூறு சதவீதம் சரியாக நிகழவேண்டும். அவன் தேவாலயத்துக்கு பரிசுத்தஆவியின் ஏவுதலினால் வந்து அங்கு அவரை காணவில்லையென்றால் அது பரிசுத்த ஆவியின் ஏவுதல் இல்லாமல் அவனிலுள்ள ஆவியின் ஏவுதலாகும். ஆக அவன் கண்டான். ஆதலால் அது பரிசுத்தஆவியின் ஏவுதலாயிருக்கிறது. தியானியுங்கள். லூக்.2:25-32.

53. தீர்க்கதரிசிகள் சில காரியங்களை, சம்பவங்களை முன்னறிவிக்கும்போது அவர்கள் தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியை கொண்டு பேசுகிறார்கள். 1பேதுரு.1:11. பரிசுத்த ஆவி எலியா தீர்க்கதரிசியை கொண்டு பிதாக்களுடன் பேசினார். அப்.28:27. அவர்கள் எதையும் தங்களிலுள்ள ஆவியைக் கொண்டு கூறவில்லை. ஆக 1977 சம்பவம் சகோ.பிரன்காம் தன்னிலுள்ள ஆவியை கொண்டு பேசினாரேயன்றி பரிசுத்தஆவியின் ஏவுதலைக் கொண்டு பேசவில்லை. மேலும் அநேக செய்திகளில் தவறு, திருத்தங்கள் உண்டு, யூகங்கள் உண்டு, கணிப்புகள் உண்டு என்பதை நாம் முன்பே தியானித்தோம். காரியங்கள் இப்படியிருக்க அவருடைய பிரசங்கங்கள் யாவும் ***தேவனுடைய சத்தம்*** என்பது அவதூறு. அபாண்டம், தேவதூஷணம் ஆகும். இந்த குற்றம்

சகோ.ஜோசப் பிரன்காம் அவர்களையே சாரும். அவருக்கு வால் பிடித்துக்கொண்டு பின்செல்லும் கூட்டத்தையே சாரும்.

***54. ஆனால் பிசாசு உங்கள் உள்ளத்தில் இதோ பார் காலேப் ஜோசுவா சகோ.பிரன்காம் ஊழியத்தை கறைப்படுத்துகிறார் இனி அவர் நம்முடையவர் அல்ல. அவர் வழிவிலகி செல்லுகிறார் என கூறலாம். அப்படிப்பட்ட சிந்தனைகளுக்கு உங்கள் இருதயத்தில் என்றுமே இடம் கொடுக்காதீர்கள். சகோ.பிரன்காம் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைசி சபை காலமாகிய லவோதிக்கேயா சபையின் தூதன் தான். அவர் ஒரு தீர்க்கதரிசி தான். அதை மறுக்கும் எந்த ஆவியும் பிசாசே. ஆனால் அவருடைய பிரசங்கங்கள் யாவும் தேவனுடைய சத்தம் ஆக முடியாது. யாவும் தேவஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கிக்கப்பட்டதும் ஆகாது. வாருங்கள் நாம் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லையென்றும் கூறுவோம். அதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். மத்.5:37. தோற்றத்தின்படி ஒன்றை நிதானிக்காமல் நீதியின்படி ஒன்றை நிதானிப்போம். முகத்தாட்சனியம் இல்லாமல் தேவனுடைய மார்க்கத்தை சத்தியமாய் பேசுவோம், போதிப்போம், உபதேசிப்போம். சகோ.பிரன்காம் மீது மூடபக்திவைராக்கியம் பாராட்டவேண்டாம். அது பிசாசு.***

55. *மோசே* இஸ்ரவேலரை வனாந்தரத்தில் வழிநடத்தி, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம்வரைக்கும் அவர்களை கொண்டுவந்தான். ஆனால் அவர்களுடைய சுதந்தரத்தை அவன் அவர்களுக்கு அளிக்கவில்லை; அந்த தேசம் வரைக்கும் அவன் அவர்களை வழிநடத்தினான்.

56. ஆனால் ***யோசுவா*** தான் அவர்களுக்கு தேசத்தை பங்கிட்டு கொடுத்தான். அது சரியா? அது போன்று, கிறிஸ்துவும் சபையை, அவர்கள் சுதந்தரம் பெறவேண்டிய இடம் வரைக்கும் கொண்டுவந்தார். யோர்தானை கடக்கவேண்டியது மாத்திரமே உண்டாயிருந்தது. ஆனால் பரிசுத்தஆவியானவர் தான் சபையை ஒழுங்குப்படுத்தினார். இன்றைய யோசுவா சபையை அதன் ஒழுங்குக்கு கொண்டுவந்து, ஒவ்வொருவருக்கும் வரங்களையும், அவரவர் ஸ்தானங்களையும் அளிக்கிறார். அந்த பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து இரட்சித்த உள்ளான மனிதன் மூலம் பேசும் தேவனுடைய சத்தமாக இருக்கிறார். (***புத்திரசுவிகாரம்***, பாகம்-2, பத்தி-19, நாள்.18-5-1960)

57. யாராவது ஒருவர் ஒலிபெருக்கி கருவியின் வழியாக பேசாவிட்டால், அது தானாகவே பேசமுடியாது. அதன் வழியாக ஏதாவது ஒன்று பேசப்படவேண்டும். ஒலிபெருக்கி கருவி தானாக இயங்குவது இல்லை. அதன் வழியாக பேசப்படும் சப்தம், காற்று அலைகள் வழியாக ஒலிபெருக்கப்பட்டு, நமது செவிகளை அடைகிறது. அவ்வாறே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் சமயத்திலும் கூட, போதகர்களாகிய நாம் நாமாகவே சுவிசேஷத்தை பிரசங்கிப்பது இல்லை. நாம் தேவனுடைய சத்தத்தை, நமது வழியாக கேட்கிறவர்களுக்கு அனுப்பும் கருவியாக இருக்கிறோம். (***வாசலின் திறவுகோல்***, பத்தி 37,38, நாள் 7-10-1962) இது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனுக்கு மட்டுமே பொருந்தும். தங்களை தாங்களே பாஸ்டர்களாக ஏற்படுத்திக்கொண்ட நம்முடையவர்களுக்கு ஒருக்காலும் பொருந்தாது.

58. ***தேவனுடைய சத்தம்*** உன்னதமான மகிமையிலிருந்து உண்டாவதாகும். 2பேதுரு.1:17. அது மரித்தவனை உயிரோடெழுப்பும் சத்தம். யோ.11:43 தேவனுடைய சத்தத்தில் அனுமானமாக முன்னுரைக்கிறேன் என்பதற்கு இடமேயில்லை. ஆனால் மனுஷ ஞானத்தில் அனுமானமாக முன்னுரைக்கிறேன் என்பதற்கு இடம் உண்டு. ஆனால் தேவஞானத்தைக் கொண்டு, தேவஆவியின் ஏவதலைக் கொண்டு தீர்க்கதரிசனம் உரைக்கிறோம். கர்த்தர் உரைக்கிறதாவது எனக் கூறுகிறோம். ஆனால் அங்கு அனுமானமாக முன்னுரைக்கிறேன் என்ற சொல்லுக்கு இடமேயில்லை.

59. பாருங்கள் உலகில் பலவிதமான சத்தங்கள் உண்டு. 1கொரி.14:10 நாம் சத்தங்களை சீர்தூக்கிப் பார்த்து, அவைகளை வார்த்தையை கொண்டு சோதித்து, அது சத்தியமா அல்லது இல்லையா என்று அறிய வேண்டும். தேவனுடைய சத்தத்தின் மகத்துவத்தை கவனியுங்கள்.

அ. தேவன் சத்தமாய் முழங்கி, தம்முடைய மகத்துவத்தின் சத்தத்தை குமுறப் பண்ணுகிறார். யோபு.32:4
ஆ) தேவன் இடிமுழக்கமாய் சத்தமிடுகிறார். யோபு. 40:9
இ) உன்னதமானவர் தமது சத்தத்தை தொனிக்கப்பண்ணுகிறார். சங்.18:13
ஈ) கர்த்தர் தம்முடைய சத்தத்தை முழங்கப்பண்ணுகிறார். சங்.46:6
உ) கர்த்தர் தமது சத்தத்தை பலத்த சத்தமாய் முழங்கப்பண்ணுகிறார். சங். 68:33
ஊ) தேவனுடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போல் இருக்கிறது. வெளி.1:15, எசே.43:2
எ) தேவனுடைய சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து உண்டாகிறது. 2பேதுரு.1:17
ஏ) தேவனுடைய சத்தம் பூமியை அசையப்பண்ணுகிறது. எபி.12:26.
ஐ) தேவனுடைய சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. யோ.12:28
ஒ) தேவனுடைய சத்தம் மேகத்திலிருந்து உண்டாயிற்று. மத்.15:5
ஓ) பிரேதக் குழியிலுள்ள அனைவரும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். யோ.5:28
ஔ) மரித்தோர் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். யோ.5:25
ஃ) தேவனுடைய சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரம்போல் இருக்கிறது. தானி.10:6

60. தேவனுடைய சத்தத்தின் மகத்துவம் மேற்கண்டவாறு இருக்க சகோ.பிரன்காமின் அனைத்து பிரசங்கங்களையும் ***தேவனுடைய சத்தம்*** என்று கூறுவது மடமை ஆகும். சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் ஆவிக்குரியவர்களாயிருப்பீர்களானால் சிந்திப்பீர்கள். இது சகோ.ஜோசப் பிரன்காம் மற்றும் அவரது ஆதரவாளர்கள், கூட்டாளிகள் அனைவருக்கும் ஒரு மாபெரிய வெட்கக்கேடாகும். நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிந்த வேளையில் இவர்கள் பிசாசின் கண்ணியில் விழுந்தது என்ன?

61. ஆக சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் யாவும் முற்றிலும் தேவசத்தம் இல்லை. முற்றிலும் தேவஆவியினால் அருளப்பட்டதும் இல்லை. ஆனால் அவருடைய பிரசங்கங்களில் தேவனுடைய சத்தம் உண்டு. தேவஆவியினால் ஏவப்பட்டு பேசிய காரியங்கள் உண்டு. அதை நானோ மற்றும் வேறுயாருமோ மறுக்கவே முடியாது. அவருடைய பிரசங்கங்களில் தேவஞானம் உண்டு. அதே வேளையில் மனுஷ ஞானமும் உண்டு. ஆவிக்குரிய ஞானம் உண்டு. ஒரு முதியோரின் ஞானம் உண்டு. ஒரு வாலிபனின் ஞானம் உண்டு. ஒரு அமெரிக்கனின் ஞானம் உண்டு. அவருடைய யூகங்கள் உண்டு. அவருடைய அனுமானங்கள் உண்டு. ஆதலால் அவருடைய பிரசங்கங்களுக்கு ***ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே*** என்ற தலைப்பே வேதபூர்வமானது. இதைவிட்டுவிட்டு ***தேவனுடைய சத்தம்*** என்று பெயரிட்டு அழைப்பது சகோ.ஜோசப் பிரன்காமின் லௌகிக சம்பந்தமான ஞானம். அது பரத்திலிருந்து இறங்கிவராத ஞானம்.

62. ஜீவவார்த்தையின் அடிப்படையில் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் லவோதிக்கேயா சபை தூதன், ஒரு தீர்க்கதரிசி அவ்வளவுதான். இதற்கு மிஞ்சி, அவரை மிகைப்படுத்தி, மேன்மைப்படுத்தி எழுதுவது பேசுவது, போதிப்பது, உபதேசிப்பது அனைத்தும் பிசாசே. சகோ.பிரன்காம் தன் ஊழியக்காலத்தில் தன்னைத்தானே தாழ்த்தி, தன் ஊழியத்தை உண்மையும் உத்தமுமாக செய்தார். முடிவில் தன் பணியை நிறைவேற்றி, கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார். இனி மரித்தோர் உயிர்த்தெழும் நாளில் அவரும் உயிர்த்தெழும்புவார். அவருக்கென்று பிரத்தியேகமான உயிர்த்தெழுதல் கிடையாது. உண்டு என்று போதிக்கிற வேலூர் தாமஸ் பிசாசே. சகோ. பிரன்காமை கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என அழைத்து, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்பவன் யார்? உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசே. இவரை மேன்மைப்படுத்தி, தேவனுக்கு செலுத்தவேண்டிய கனத்தையும், மகிமையையும் சகோ.பிரன்காம் பக்கம் திருப்பி, மக்களை சாத்தான் திசை திருப்பிவிட்டான். ஆதலால் தான் அவர்கள் எதற்கெடுத்தாலும் பிரன்காம் பிரன்காம் என துதிபாடிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆவிக்குரியவர்கள் இப்படிப்பட்ட துதிபாடல்கள் மத்தியில் காணப்படமாட்டார்கள். ஒருவனும் மனுஷனைக் குறித்து மேன்மைப்பாராட்டாதிருப்பானாக. சகோ. பிரன்காம் மாம்ச இச்சையில் பிறந்த ஒரு மனிதனே. உங்களை போன்றும், என்னைப் போன்றும் ஒரு மனிதனே. ஆனால் அழைப்பில் வித்தியாசம் உண்டு. ஆவியின் அபிஷேகத்திலும் வித்தியாசம் உண்டு.

63. இங்கு மேலும் சில எடுத்துக்காட்டுகளை தருகிறேன். அவைகளையும் நீங்கள் தியானியுங்கள். சகோ.பிரன்காம் தான் நினைத்த ஒரு காரியத்தை, பாருங்கள் அது தேவனுடைய சத்தம் அல்ல, தேவஆவியினால் தூண்டப்பட்டதும் அல்ல, மாறாக அவர் நினைத்ததை பிரசங்கித்தார். பின் அது தவறு என தன்னை திருத்திக்கொண்டார்.

64. அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன் - - - அங்கு ஏதோவொன்று கூறப்பட்டது. அது வெறும் ஒரு சத்தம் மாத்திரமல்ல. ஏதோ ஒன்று கூறப்பட்டது. அவன் அதை எழுதப்புறப்பட்டான். அப்பொழுது . . . வானத்திலிருந்து ஒரு சத்தம் (என்னிடம் கூறக்கேட்டேன் - saying unto me) உண்டாகக்கேட்டேன். கவனியுங்கள் அந்த சத்தங்கள், அந்த இடிமுழக்கங்கள் எங்கே இருந்தன? பரலோகத்தில் அல்ல; பூமியின் மேல்! அந்த இடிமுழக்கங்கள் வானங்களிலிருந்து ஒரு போதும் சத்தமிடவில்லை. அவை பூமியிலிருந்து சத்தமிட்டன. நான் எழுதவேண்டுமென்றிருந்தேன்; அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரை (கொட்டை எழுத்து *மு.த்.தி.ரை.*) முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் (என்னிடம் கூறக்கேட்டேன் saying unto me) உண்டாகக்கேட்டேன். இந்த ஏழு இடிமுழக்கங்களின் சத்தங்கள் ஒன்று மாத்திரமே, புத்தகத்தில் ஒட்டிக்கொண்டு, ***வெளிப்படாமல் உள்ளது. அவை புத்தகத்தில் எழுதப்படவில்லை. (ஐயா, இது தான் முடிவின் அடையாளமா***? புதிய பதிப்பு, பக்கம் 96, பத்திகள் 303-306, நாள் 30-12-1962) Then these Seven Thunders, Voices, is the only thing that is stuck to the Book, that is not revealed. ***It is not even written in the Book. (Sir, Is this the time***? Page 38, Para1)

65. பின்னர் ***வேதத்தில் எழுதப்படாத ஒரு இரகசியமான இடிமுழக்கங்கள்*** அது சரி. ஆகவே எடுத்துக்கொள்ளப்படுவதற்கான விசுவாசத்திற்காக மணவாட்டியை ஒன்று சேர்ப்பதற்கென்று, இந்த கடைசி நாட்களில் அந்த ஏழு இடிமுழக்கங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். (*ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*, முதலாம் முத்திரை, பக்கம் 215, பத்தி 75, நாள். 18-3-1963.) And then there is comingforth ***seven mystreous thunders that's not even written at all. That's right.***

***66. புஸ்தகத்தின் புறம்பாக முத்தரிக்கப்பட்டதென்றும், அவை (முத்தரிக்கப்பட்ட இரகசியங்கள்) அவை வேதத்திலே எழுதப்பட்டிருக்காத காரியமாக இருக்குமென்றும் நான் எப்பொழுதும் நினைப்பேன்; ஆனால் அவர் அவ்விதமாக செய்யமாட்டார் என்று விளங்கவைக்கப்பட்டது. அவை வேதத்திலே எழுதப்பட்டிருக்கும் காரியம் அல்ல... அவை வேதத்திலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியமாக இருக்கின்றன. ஆகவே ஒருவன் இத்துடன் ஒரு வார்த்தையை கூட்டினாலும் அல்லது எதையாவது எடுத்துப்போட்டாலும் .. ஆகவே இந்த ஏழு சபைகளின் காலங்களாக வேதத்திலே இருக்கும் இரகசியமாக அவை இருக்கின்றன. (ஏற்றக்காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம், பத்தி 83, நாள் 18-7-1965)***

67. I always thought it was sealed on the backside of the book ***and it 'd be something that was n't wrote in the Book,*** but it turned out that it was made known that He can't do that It's n't something that's written in the book. It is something that's been hid in the book. For who so ever shall take one Word from it or add one word to it…. So it is a mystery that's been in the book in these seven church ages.

***68. பாருங்கள் சகோ.பிரன்காம் 1962-ல் மேலும் 1963-ல் அந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்கள் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை என்று நான் நம்புகிறேன் என்கிறார். நான் எழுதப்படவில்லை என நினைத்தேன் என்கிறார். பின் 1965-ல் அது அப்படி அல்ல என எனக்கு விளங்கவைக்கப்பட்டது. அவைகள் வேதத்திலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியங்கள் என்கிறார்.***

69. இங்கு பிரியமானவர்களே நீங்கள் சற்று தியானியுங்கள், நிதானியுங்கள். இந்த வாக்குமூலங்கள் யாவும் ***தேவனுடைய சத்தம்*** என்று கூறமுடியுமா? இந்த வாக்குமூலங்கள் யாவும் தேவஆவியினால் ஏவப்பட்டது என்றும் கூறமுடியுமா? முதல் இரு வாக்குமூலங்கள் அவருடைய சொந்த நினைவுகளும், சொந்த நம்பிக்கையும், சொந்த

கருத்துக்களுமாயிருந்தன. மூன்றாவது வாக்குமூலம் மட்டும் தேவஆவியினால் ஏவப்பட்டு அதன் வாயிலாக அவர் தன் தவறை திருத்திக்கொண்டார்.

70. மேலும் இங்கு மற்றொரு எடுத்துக்காட்டையும் மேற்கோள் கொடுத்து உங்களுக்கு விளக்கிக்காட்ட ஆவியினால் தூண்டப்படுகிறேன். சகோ.பிரன்காம் 18-5-1962 Letting off the pressure *(அழுத்தத்தை வெளியேற்றுதல்)* கீரின் லேக் எந்த இடத்தில் பிரசங்கித்தார். இவர் இதே தலைப்புக்கொண்ட மற்றொரு பிரசங்கத்தை ஜெபர்சன்வில்லில் 13-5-1962-ல் பிரசங்கித்துள்ளார். அது நமது கரங்களில் ***அழுத்தத்தை வெளியேற்றுதல்*** என்ற தலைப்பில் உள்ளது. ஆனால் நான் எடுத்துக்காட்டும் செய்தி இன்னும் மொழிபெயர்ப்பு நடக்கவில்லை என நினைக்கிறேன். இதை நான் சகோ. ஏ. டேவிட் மமலிஸ் (Bro. David Mamalis) அவர்களின் தீர்க்கதரிசி செய்திகள் பிரசுரத்திலிருந்து எடுத்தேன். இந்த செய்தியின் 184வது பத்தியை உங்களுக்கு கீழே தருகிறேன்.
It's all over. The next thing will be a sweep that'll get that little group together. In a month or so she'll be gone, as soon as she's gathered together, well, we're at the end. There's no hope left nowhere.

71. எல்லாம் முடிவடைந்துவிட்டது. அடுத்து அந்த சிறு கூட்டத்தை ஒன்று சேர்க்கும் நிகழ்ச்சி நடைபெறும். ஒரு மாதமோ அல்லது அதற்கு பின்னரோ அவள் ஒன்று சேர்க்கப்பட்டவுடனே கடந்து சென்று விடுவாள். சரி, நாம் முடிவில் இருக்கிறோம். வேறு எங்குமே எந்த நம்பிக்கையும் இல்லை.

72. பிரியமானவர்களே, சகோ. பிரன்காம் அந்த சிறு மந்தை ஒன்று சேர்க்கப்பட்ட ஒரு மாதம் அல்லது அதற்கு பின்னரோ அவள் எடுத்துக்கொள்ளப்பட்டுவிடுவாள் என்று கூறுகிறார்.

73. கர்த்தர் வானத்திலிருந்து இறங்கிவரும்போது, முதலாவதாக ***ஆரவாரம்*** புறப்பட்டு சென்றது. ***ஆரவாரம்*** என்பது ஜனங்களை ஒன்று கூட்டுவதற்கென்று அளிக்கப்படும் செய்தி ஆகும். ***(ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்***, புதிய பதிப்பு, பத்தி 141)
முதலாவதாக ***ஆரவாரம்*** - மக்களை ஆயத்தப்படுத்த ஓர் செய்தி... முதலில் செய்தி மணவாட்டியை ஒன்று சேர்க்கிறது. (பத்தி 152)
முதலாவதாக, மணவாட்டியை ஒன்று சேர்க்க அழைக்கும் செய்தி. (பத்தி 154)

74. மணவாட்டி ஒன்று சேர்க்கப்பட்டவுடனே, ஒரு மாதமோ அல்லது அதற்கு பின்னரோ எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும் என்கிறார்.

75. ஆனால் தேவனுடைய வார்த்தை, ஜீவ வார்த்தை இது குறித்து என்ன கூறுகிறது?
அ) அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். மத்.24:36.
ஆ) உங்கள் ஆண்டவர் இந்த நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.. நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரர் வருவார், ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். மத்.24:42,44
இ) அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்; குமாரனும் அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியினால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். மாற்.13:32,33.

***76. கர்த்தருடைய வருகை குறித்து காலக்கணக்கு கொடுத்தவர்கள் அனைவரும் இது வரை தோல்வியைதான் கண்டார்கள். சகோ.பிரன்காமும் அவர்களில் ஒருவர் தான். இதை யாரும் மறுக்க முடியாது. சகோ.பிரன்காமின் இந்த தோல்வியான காலக்கணக்கையும் தேவசத்தம், தேவஆவியினால் ஏவப்பட்டு பேசினார் என கூறமுடியுமா? அவ்வாறு கூறுகிறவன் பிசாசே.***

77. தேவனுடைய சத்தம் என்ன என்று ஏ பி சி டி யே தெரியாதவனே, அறியாதவனே சகோ.பிரன்காமின் செய்திகள் யாவும் ***தேவனுடைய சத்தம்*** என்று கூறுவான். அது பிசாசு என்று நாம் கண்டோம். ஆம், பிசாசே அவ்வாறு கூறி ஜனங்களை சத்தியத்திலிருந்து திசை திருப்புகிறான்.

78. ஆதி. 6:4 தேவகுமாரர் குறித்து சகோ.பிரன்காம் கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார். **கே.ப.**11 (COD 1:2) பக்கம் 47, பத்தி 148, நாள். 3-1-1954. அவர்கள் தூதர்கள் அல்ல என்று நான் நம்புகிறேன். அவைகள் ஜீவிகளாயிருந்தன. தேவகுமாரர் என்று வேதம் கூறுகிறது. தூதர்கள் அல்ல, அவர்கள் தேவகுமாரராய் இருந்தனர். ***அவர்கள் பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தனர்.*** வந்து மாம்சத்துக்குள் வைக்கப்பட்டனர். . . . . அவர்கள் இயற்கைக்கு மேம்பட்ட ஜீவிகள் என்றும், அவை கீழே வந்து மனிதன் ஆவியை ஆட்கொண்டன என்றும் நான் நம்புகிறேன்.

79. It was the spirits of those angelic beings that fell before the foundation of the world, back there when the war went on in Heaven… Lucifer was castout with all his children (all the angels that he had deceived) and those angels came to earth and was subject then to become human. And when they did, that's when "The sons of God" saw the daughters of man was fair, and took unto them wives. (***Q.A.*** 66, Page 312, para 365, dt. 6-10-57)

80. இங்கு 3-1-54 மற்றும் 6-10-57 பிரசங்கங்களில் தேவகுமாரர்கள், அவர்கள் பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்த, வந்து மாம்சத்துக்குள் வைக்கப்பட்ட இயற்கைக்கு மேம்பட்ட ஜீவிகள் என்றும், அவர்கள் கீழே வந்து மனிதனின் ஆவியை ஆட்கொண்டன என நம்புவதாக பிரசங்கிக்கிறார். ஆனால் இப்பொழுது கீழே சற்று கவனியுங்கள். அவருடைய பிரசங்கத்தில் மாற்றத்தை நாம் காணலாம்.
விழுந்துபோன தேவதூதர்கள் மாம்சத்தில் தேவகுமாரர்களாக தோன்றினதாக எழுத்தாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் எப்படி அவ்வாறு கருதமுடியும் என்று ***எனக்கு புரியவில்லை.*** அது சாத்தானை சிருஷ்டிகனாக செய்துவிடும். சாத்தான் சிருஷ்டிகன் அல்ல. அவன் சிருஷ்டியை கெடுப்பவன். (Perverter) .... எனவே தேவகுமாரர்கள் என்பவர்கள் தேவனுடைய வம்சத்தில் ஆதாமின் வழியாக வந்த சேத்தின் புத்திரர்.

மனுஷகுமாரத்திகள் சாத்தான் வழியாக வந்த காயீனின் புதல்விகள். --- அவர்கள் சௌந்தரியமுள்ளவர்களா யிருந்தனர். அதற்கு காரணம், அவர்களுடைய உடைகளும், நவீன போக்குமே. அது தான் அவர்களுடைய அழகை எடுத்துக் காண்பிக்கின்றது. (*முடிவு கால சுவிசேஷம்,* பக்கம் 26, பத்தி 75, 76, நாள். 3-6-1962)

81. பாருங்கள் இங்கு தேவகுமாரர்கள் சேத்தின் புத்திரர்கள் என்கிறார். இப்பொழுது இந்த பிரசங்கங்களை தேவனுடைய சத்தம் என்று கூற முடியுமா? அல்லது தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டுதான் பேசினார் என்று கூறமுடியுமா? நாம் தேவகுமாரர்கள் சேத்தின் புத்திரர்கள், மனுஷகுமாரத்திகள் காயீனின் புதல்விகள் என்று விசுவாசிக்கிறோம்.

82. மேலும் ஆதி.6:4 இராட்சதர்கள் குறித்து கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார்.
சர்ப்பம் ஒரு ஊரும் பிராணி அல்ல. சாபம் அதை ஊரும் பிராணி ஆக்கிற்று. அது அங்கேயிருந்த ஸ்திரீயிடம் சென்றது. அவள் விபசாரம் செய்து தன் முதல் குமாரனான காயீனை பெற்றெடுத்தாள், தன் தந்தையின் சுபாவம். அந்த பெரிய மிருகம் ஒரு மனிதனை போலவே நிமிர்ந்து நடந்தது. இதிலிருந்து தான் இந்த இராட்சதர்கள் வந்தனர் என்று நான் நம்புகிறேன். ஆம், அது முற்றிலும் சரி. இப்பொழுது, அது என்னுடைய சொந்த எண்ணம். ***அதில் ஒரு வேளை நான் தவறாகவும் இருக்கலாம். இது என்னுடைய கருத்து.*** பாருங்கள் ஆனால் அவர்கள் பெரிய மனிதர்களாக இருந்தனர். ***கே.ப.*** 10 (COD 1:2), பக்கம் 41, பத்தி 125, நாள் 3-1-1954. இது ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*** பிரசங்கிப்பதற்கு சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு இவரால் பிரசங்கிக்கப்பட்டது. ***சாத்தானின் வித்து*** செய்தியும் 28-9-1958-ல் பிரசங்கிக்கப்பட்டது. ஆக சர்ப்பத்தின் வித்து வெளிப்பாடு, ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டிலிருந்து வந்தது என கூறமுடியாது. ஏனென்றால் சாத்தானின் வித்து குறித்த அவருடைய எண்ணங்கள் 1954, 1957 லியே அவர் கொண்டதாக இருக்கிறது. அது ஒரு வேளை தவறாகவும் இருக்கலாம். அது அவருடைய கருத்து.

83. பிரியமானவர்களே, ஆவிக்குரியவர்களே இதை சற்று கவனியுங்கள். இப்பொழுது இந்த அவருடைய கருத்து, தேவனுடைய சத்தமா? அல்லது தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு பேசப்பட்டதா? நாம் அவருடைய எண்ணங்களை சார்ந்திருக்கலாமா? அல்லது அவருடைய கருத்துக்களை சார்ந்து இருக்கலாமா? அல்லது தேவனுடைய சத்தத்தை சார்ந்து இருக்கவேண்டுமா? அல்லது தேவனுடைய ஆவியில் ஏவப்பட்டு தேவனுடைய மனுஷர்கள் பிரசங்கிப்பதை சார்ந்து இருக்கவேண்டுமா? ***ஒன்று தேவனுடைய சத்தமாக, தேவஆவியினால் ஏவப்பட்டு பேசப்பட்டதாக இருந்தால் அங்கு அந்த தேவனுடைய மனுஷன் ஒரு வேளை நான் கூறுவது தவறாகவும் இருக்கலாம் என்று கூறவே கூடாது அல்லவா? நான் என்ன எழுதுகிறேன் என்பது உங்களுக்கு புரிகிறதா? ஆதலால் தயவு செய்து, சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் முழுவதும் தேவனுடைய சத்தம் என்று கூறாதீர்கள்*** என்று உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கேட்டுக் கொள்கிறேன்.

84. மேலும் சிலர் தலைப்பு கொடுப்பது போன்று சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் அந்த தீர்க்கதரிசியின் சத்தம் (The Voice of the Prophet) எனவும் கூறமுடியாது. ஏனென்றால் அந்த தீர்க்கதரிசி (The Prophet) என்று அழைக்கப்படுபவர் இயேசு ஒருவரே. அதாவது அவர் மனுஷகுமாரனாகிய இயேசு.

85. தீர்க்கதரிசிகள் அநேகம் பேர் இருந்தார்கள். அவர்கள் ஒரு தீர்க்கதரிசி (A Prophet) என்று அழைக்கப்பட்டனர். ஆனால் அந்த தீர்க்கதரிசி (The Prophet) இயேசு மாத்திரமே. அதே போன்று உலகிலே இராஜாக்கள் பலர் இருந்தனர். ஆனால் அந்த ராஜா (The King) என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரையே குறிக்கும். அது அவர் தாவீதின் குமாரனாக ஆளுகை செய்யும் போது, இராஜாவாக இருப்பார். மேலும் பாருங்கள் நான் ஒரு மனுஷகுமாரன் (a son of man) ஆனால் அந்த மனுஷ குமாரன் (The Son of Man) என்பவர் இயேசு மாத்திரமே. ஆதலால் சகோ. பிரன்காமின் பிரசங்கங்களுக்கு அந்த தீர்க்கதரிசியின் சத்தம் (The Voice of the Prophet) என்பதும் பொருந்தாது. ***அந்த தீர்க்கதரிசியின் சத்தம் (The Voice of the Prophet) என்றால் அது தேவசத்தத்தையே குறிக்கும். ஆதலால் இந்த தலைப்பும் தவறு.***

***86. மேலும் உரைக்கப்பட்ட வார்த்தை - வில்லியம் மாரியன் பிரன்காம் என்ற தலைப்பு கொடுத்து, அதன் கீழ் உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து என்ற தலைப்பு கொடுப்பதும் பேய்த்தனத்துக்கடுத்ததே. சகோ. பிரன்காமினால் பிரசங்கப்பட்ட வார்த்தைகள் ஒருக்காலும் தேவனுடைய மூலவித்து ஆகாது. ஒருக்காலும் ஆகாது ஐயா! சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் ஒருக்காலும் தேவனுடைய வித்தாக முடியாது. ஆதலால் இது போன்ற தலைப்புகள் யாவும் பிசாசினுடைய வஞ்சகமே. அது தேவனுடைய சத்தம் அல்லாதபோது, தேவஆவியினால் ஏவப்பட்டு பேசப்படாததல்லாதபோது அது எப்படி முற்றிலுமாக தேவனுடைய மூலவித்தாக முடியும்.***

87. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, சகோ.பிரன்காமின் பிரசங்கங்கள் யாவும் ***தேவனுடைய சத்தம்*** ஆகாது. முற்றிலுமாக தேவஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கம்பண்ணப்பட்டதும் ஆகாது. இதை ஆவிக்குரிய பிரகாரமாக, ஆவிக்குரிய ரீதியில் சம்மந்தப்படுத்தி இதுவரை காட்டியுள்ளேன். ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ள மறுக்கிறது உங்களது சுயாதீனம். ஏற்றுக்கொள்ளாதவர்களை நியாயந்தீர்க்கிறது ஒன்றிருக்கிறது. தேவனுடைய வார்த்தையே அவர்களை நியாயந்தீர்க்கும்.

88. முடிவாக ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*** சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரித்து **Voice of God Recordings** என்ற தலைப்பை, பெயரை ஆவிக்குரிய பிரகாரமாக வேதவாக்கியங்களின் பிரகாரமாக மாற்றி அமைத்து ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே என மாற்றி அமைத்து, சகோ.பிரன்காமின் பிரசங்கங்களை கூட்டாமலும், குறைக்காமலும் அது உள்ளபடியே பிரசுரிக்கவும், பிசாசினுடைய பிடியில் இருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கம் தெளிந்து, எதிராளியானவனின் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் ஜெபிக்கவேண்டியது ஆவிக்குரிய ஒவ்வொருவருடைய கடமையுமாயிருக்கிறது. ஏனென்றால் இக்காலத்துக்குரிய செய்தி உலகம் முழுவதும் நூறு சதவீதம் அது கொடுக்கப்பட்ட பிரகாரமாக, பிரசங்கிக்கப்பட்ட பிரகாரமாக சென்று தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கரங்களை அடையவேண்டியதாயிருக்கிறது. கடைசி ஆடு மந்தையில் சேரவேண்டியதாயிருக்கிறது. பணியோ மிகவும் பெரிது. ஆனால் பிசாசின் கண்ணியோ இறுக்கிவிட்டது. ஆதலால் நம்முடைய ஜெபமே ஜெயம்.

89. வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி கர்த்தர் உங்கள் மனதை திறப்பாராக. சமாதானத்தின் தேவன் *வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*-சை ஆட்கொண்ட சாத்தானை உங்கள் கால்கள் கீழே நசுக்கி போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்,

2005 நவம்பர், டிசம்பர் / ஜனவரி 2006 *சகோ. காலேப் யோசுவா*

# கிறிஸ்துவின் மணவாட்டிக்கு 2006 ஆண்டிற்கான ராஜரீக வாழ்த்து மற்றும் ஐக்கிய அழைப்பு

***ஜீவவார்த்தைகள் பிலி.4:19, ஆதி.49:25, எபே.1:3 களின்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் இந்த புதிய ஆண்டு 2006-ல் நிறைவாக்குவார். ஆமென்.***

வாழ்வோ மரணமோ, உடன் விசுவாசத்தில் சகோதர சகோதரிகளோ இல்லாமையோ, எனக்கு பிரசங்க பீடமோ இல்லையோ, நான் எழுதும் செய்தித்தொகுப்புகளை படித்து தியானிக்கிறார்களோ இல்லையோ, இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம், நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் என்னையும் என் ஊழியத்தையும் ஏற்றுக்கொள்வார்களோ இல்லையோ, சகோ அந்தோணிதாஸ் போன்று என்னை தங்களுடைய வீட்டிற்கு அழைப்பவர்கள் உண்டோ அல்லது பாஸ்டர் தங்கமணி சாமுவேல் போன்று வீட்டு வாசலில் நின்று கொண்டு உள்ளே வராதே என்று விரட்டுகிறவர்கள் உண்டோ, சகோ.யோவேல் மூடி பரமானந்தம் தன் உதவும் கரங்களை என் பக்கம் நீட்டுவாரோ அல்லது முடக்கிக்கொள்வாரோ, பாஸ்டர் ஐசக் வசந்தகுமார் என் மருத்துவ செலவுகளுக்கு உதவி செய்வாரோ இல்லையோ, நான் என் வீட்டை பராமரிக்கிறேனோ இல்லையோ, நான் என் குடும்பத்தை போஷிக்கிறேனோ இல்லையோ, நானும் என் குடும்பத்தாரும் எங்கள் மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவை பராமரிக்கட்டும். ஆதலால் நான் எதை பற்றியும் கவலைப்பட்டது இல்லை, கவலைப்படுகிறது இல்லை, கவலைப்படபோவதும் இல்லை. ஏனென்றால் என் தேவன் தம்முடைய ஊழியக்காரனுடைய சுகநலன்களை விரும்புகிற தேவனாயிருக்கிறார். வேதவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. ஆதலால் நான் மனுஷர்களில் ஒருவருக்கும் அடிமையானவன் இல்லை. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம், துதி கனம் மகிமை உண்டாவதாக.

நான் ஒன்றைக் குறித்தே என் உள்ளத்தில் பாரமுடையவனாக இருக்கிறேன். அதாவது ஓ! கர்த்தாவே, நானும் என் குடும்பத்தினரும் ***விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு*** என்பவைகளில் பெருகி, ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சிக்குத்தக்கதாய் கிரியை செய்யட்டும் என்பதே என் ஜெபமாயிருக்கிறது.

இந்த வனாந்தர யாத்திரையில் பண ஆசை, பெருந்தீனி, பெரியபெரிய காரியங்கள், நல்ல நிலைமைகள், புகழ், வீடு, ஆஸ்தி போன்ற இச்சையினாலுண்டான கேட்டுகளுக்கு தப்பி கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காகவும், அதை பூரணபடுத்துவதற்கென்றும், கர்த்தருடைய வருகைக்கென்றும் நான் கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்த அவளுக்காக போதிக்க வல்லவனாயிருக்க கிறிஸ்துவின் வல்லமையையும், பெலத்தையும் என் மேல் பொழியும் கர்த்தாவே என்பதே இந்த புதிய ஆண்டில் என்னுடைய மற்றொரு ஜெபமாயிருக்கிறது.

மேலும் எங்களது ஐக்கியம் கல்வாரி ஜெப வீடோடு இருக்கிறதோ இல்லையோ, சென்னை சபையோடு இருக்கிறதோ இல்லையோ, மணவாட்டி கூடாரத்தோடு இருக்கிறதோ இல்லையோ, கல்வாரி ஜெபவீட்டோடு இருக்கிறதோ இல்லையோ, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீட்டோடு இருக்கிறதோ இல்லையோ, எங்களது ஐக்கியம் தங்களை தாங்களே பாஸ்டர், சுவிசேஷகர், போதகர் என அழைத்துக்கொள்பவர்களோடு இருக்கிறதோ இல்லையோ, ஆனால் எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கட்டும். நாங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தனித்தனியே அவயவங்களாக இருக்கட்டும். கிறிஸ்துவே எங்களது தலையாக இருக்கட்டும். வெளிவேஷத்தில் அல்ல இருதயத்தில் மேன்மைபாராட்டும் கிறிஸ்துவின் மணவாட்டியை இந்த புதிய ஆண்டு 2006-ல் எங்களோடு ஐக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, வலது கரத்தை நீட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அழைக்கிறோம்.

சகோ. காலேப் யோசுவா
சுவிசேஷகர்